

# கிரந்தம் தவிர் தமிழ் பழகு

தொகுப்பு : வி.இ. குகநாதன்



# காணிக்கை

முன்னைநாள் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க
முகாமையாளரும்
முன்னைநாள் அக்குறோதாபாஸ் நிறுவன
தொழில்முனைவோராகவும்
"அறம் செய்" அமைப்பின் இயக்குனராகவுமிருந்து
மறைந்த
கனகசபை இலங்கநாதன் அவர்களிற்கு
இக்கையேட்டினைக் காணிக்கையாக்குகிறோம்.



– அறம்செய் அமைப்பு

# முகவுரை

இந்த தமிழ் பழகு என்ற கையேடானது தனித்தமிழ் பயன்பாட்டினை வலியுறுத்தி வெளியிடப்படுகின்றது. தனித்தமிழ் என்பது பிறமொழி கலவாது தமிழ் மொழியினை மட்டுமே பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதலாகும். இங்கு ஆங்கிலம் போன்ற மொழிகள் கலக்கும்போது வேறுபாடு தெளிவாகத்தெரியும், ஆனால் உறவாடிக் கெடுக்கும் வடமொழி (கிரந்தம்) கலக்கும்போது கண்டுகொள்வது கடினம். இந்த கிரந்தக்கலப்பினை மேற்கொள்ளுபவர்கள் முதலில் தமிழும் சமசுகிரதமும் இரண்டு கண்கள் என ஆரம்பித்து கலப்பு ஒரு கட்டத்தைத் தாண்டியபின் தமிழால் தனித்து இயங்கமுடியாது, அது ஒரு செம்மொழியல்ல, சமசுகிரதத்தின் வழித்தோன்றலே தமிழ் என்றெல்லாம் கதை பேசுவார்கள். இந்த சூழ்ச்சி நோக்கிற்காக சிவபெருமானையும், அரசனையுமே துணைக்கழைப்பார்கள் (வீரசோழியம்). இவ்வாறான முயற்சியால் மூன்றில் இரண்டு பங்குத் தமிழர்களை ஏற்கனவே தெலுங்கு, கன்னடம், துளு மற்றும் மலையாளம் எனப் பிரித்தெடுத்துவிட்டார்கள். இன்று வழக்கில் நாம் பயன்படுத்தும் தமிழிலும் ஏறக்குறைய 25 முதல் 30 வரையான விழுக்காடு அளவிற்கு கிரந்தச் சொற்கள் கலந்துள்ளன. எஞ்சியுள்ள தமிழையும் அழிக்கும் முயற்சியினையே இப்போதும் செய்துவருகிறார்கள். இந்த இன்னலை எதிர்கொள்ளவே தனித்தமிழ் தேவைப்படுகின்றது.

. இன்றைய உலகமயமாதல் நிலையில் தனி மொழிப் பயன்பாடு நடைமுறையில் சரிப்பட்டுவருமா என்று நினைக்கலாம். பாலில் சிறிதளவு நீர் கலக்கப்படுவதற்கும், நீரிற்குள் சிறிதளவு பாலைக் கலப்பதற்கும் வேறுபாடு உண்டு. பிந்தைய நிலையிலேயே இன்றைய தமிழிற்கு ஏற்பட்டுள்ளது .

தனித்தமிழ் பயன்பாட்டிற்குச் செய்யவேண்டியவை.

1. முடியுமானவரை தமிழிலுள்ள 247 எழுத்துக்களை மட்டுமே பயன்படுத்துங்கள். கிரந்த எழுத்துக்களை ஸ,ஷ,ஜ,ஹ போன்றவற்றை தவிருங்கள் (எடுத்துக்காட்டாக ஹிந்து என்பதை இந்து எனவும் ரஸ்யா என்பதனை இரசியா எனவும் எழுதவும்)
2. கிரந்தச் சொற்களிற்குப் பதிலான தூய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துதல். (பட்டியல் இணைப்பு)
3. புதிய சொற்களிற்கான தமிழ் மொழியாக்கம். (எடுத்துக்காட்டு : Pen drive - விரலி, Whatsapp- புலனம்).

இந்த கையேட்டில் முதற்பகுதியில் கிரந்தச்சொற்களிற்கு சரிநிகரான தமிழ்ச்சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை மட்டும்தான் முழுமையாகத் தமிழில் கலந்துள்ள கிரந்தச்சொற்களல்ல. சொற்களின் வேர்ச்சொற்களை கண்டுகொள்வதன் மூலமே தமிழ்ச்சொற்களைக் கண்டுகொள்ளலாம். ஒரு தொடர்ச்சியான செயற்பாட்டின் மூலமே இம் முயற்சி வெற்றிபெறும். இம் முயற்சியில் நானும் ஒரு மாணவனே. ஏன் இந்த கையேட்டில் கூட நானே அறிந்திராமல் கிரந்தச்சொற்களையே பயன்படுத்தியிருக்கவும் கூடும். ஒவ்வொரு நாளும் ஒரு தனித்தமிழ்ச்சொல்லினைக் கற்பதன் மூலமோ அல்லது ஒரு கிழமைக்கு ஒரு எழுத்தில் தொடங்கும் சொற்களிற்கான தனித்தமிழ்ச்சொற்களைக் கற்பதன் மூலமோ இதில் வெற்றி பெறலாம்.

# கிரந்தம் தவிர் - தமிழ் பழகு

## அ

| | | |
|---|---|---|
| அகங்காரம் | - | செருக்கு |
| அக்கிரமம் | - | முறைகேடு |
| அசலம் | - | உறுப்பு |
| அசூயை | - | பொறாமை |
| அதிபர் | - | தலைவர் |
| அதிருப்தி | - | மனக்குறை |
| அதிருஷ்டம் | - | ஆகூழ், நல்லூழ் |
| அத்தியாவசியம் | - | இன்றியமையாதது |
| அநாவசியம் | - | வேண்டாதது |
| அநேகம் | - | பல |
| அந்தரங்கம் | - | மறைபொருள் |
| அபகரி | - | பறி, கைப்பற்று |
| அபாயம் | - | இடர் |
| அபிப்ராயம் | - | கருத்து |
| அபிஷேகம் | - | திருமுழுக்கு |
| அபூர்வம் | - | புதுமை |
| அமிசம் | - | கூறுபாடு |
| அயோக்கியன் | - | நேர்மையற்றவன் |
| அர்த்தநாரி | - | உமைபாகன் |
| அர்த்த புஷ்டியுள்ள | - | பொருள் செறிந்த |
| அர்த்தம் | - | பொருள் |
| அர்த்த ஜாமம் | - | நள்ளிரவு |
| அர்ப்பணம் | - | படையல் |
| அலங்காரம் | - | ஒப்பனை |
| அலட்சியம் | - | புறக்கணிப்பு |
| அவசரமாக | - | உடனடியாக, விரைவாக |
| அவஸ்தை | - | நிலை, தொல்லை |
| அற்பமான | - | கீழான, சிறிய |
| அற்புதம் | - | புதுமை |
| அனுபவம் | - | பட்டறிவு |

அனுமதி - இசைவு

அங்கீகாரம் - ஏற்பு / ஏற்பளிப்பு

அகோரம் - கொடுந்தோற்றம்

அங்கவஸ்திரம் - மேலாடை

அசடு - பேதை, பேதமை

அசடுவழிதல் - அறியாமை

அசம்பாவிதம் - நேரக்கூடாதது

அசரீரி - உருவிலி, வான் ஒலி

அசுரன் - அரக்கன், மாந்தன்

அதிதி - விருந்தாளி

அந்திமம் - கடைசி, இறுதி

அநாதி - அறிவுக்கெட்டா பழமை

அநாதை - ஏதிலி

அப்பாவி - பேதை, குற்றமிலி

அப்பியாசம் - பயிற்சி

அபயம் - அடைக்கலம்

அபாரம் - அளவின்மை

அம்சம் - அழகு, நற்பொருத்தம்

அமரர் - இறப்பிலார்

அமிலம் - புளிக்காரம்

அர்ச்சகர் - பூசகர்

அர்த்தம் - பொருள்

அருவம் - உருவமற்றது

அலங்கரித்தல் - புனைதல்

அலாதி - தனிச்சிறப்பு

அவகாசம் - காலநீடிப்பு

அவசரம் - விரைவு

அன்னம் - சோறு

அன்னியன் - அயலன்

அனர்த்தம் - கேடு, துன்பம்

அனுசரி - ஏற்றுநட

அனுதாபம் - இரக்கம்

## ஆ

ஆச்சரியம் - வியப்பு
ஆக்ஞை - ஆணை, கட்டளை
ஆட்சேபணை - தடை, மறுப்பு
ஆதி - முதல்
ஆபத்து - இடர்
ஆமோதித்தல் - வழிமொழிதல்
ஆயுதம் - கருவி
ஆரம்பம் - தொடக்கம்
ஆராதனை - வழிபாடு
ஆரோக்கியம் - உடல்நலம்
ஆலோசனை - அறிவுரை
ஆனந்தம் - மகிழ்ச்சி
ஆன்மீகம் - இறைமை
ஆனந்தம் - இன்பம்
ஆக்கிரமிப்பு - வலிந்து கைப்பற்று, வன்கவர்வு
ஆகாரம் - உணவு
ஆகாயம் - விண், விசும்பு
ஆசனம் - இருக்கை
ஆசாமி - ஆள்
ஆத்திரம் - சினம்
ஆத்மா - உயிர்
ஆதரவு - உதவி, தாங்கல்
ஆதவன் - கதிரவன்
ஆதாரம் - சான்று, மூலம்
ஆனந்தம் - பெருமகிழ்வு

## இ

இஷ்டம் - விருப்பம்
இங்கிதம் - இனிமை
இலாபம் - ஆதாயம்
இரசாயனம் - வேதியல்

| | | |
|---|---|---|
| இராகம் | - | பண் |
| இராணுவம் | - | தரைப்படை |
| இலஞ்சம் | - | கையூட்டு |

ஈ

| | | |
|---|---|---|
| ஈன ஜன்மம் | - | இழிந்த பிறப்பு |
| ஈனஸ்வரம் | - | மெலிந்த ஓசை |

உ

| | | |
|---|---|---|
| உக்கிரமான | - | கடுமையான |
| உபசாரம் | - | முகமன் கூறல் |
| உபயோகம் | - | பயன் |
| உதாசீனம் | - | பொருட்படுத்தாமை |
| உத்தரவாதம் | - | பிணை, பொறுப்பு |
| உத்தரவு | - | கட்டளை |
| உல்லாசம் | - | களிப்பு |
| உற்சாகம் | - | ஊக்கம் |
| உண்டி | - | அருட்குவை |
| உதாரணம் | - | சான்று / எடுத்துக்காட்டு |
| உதயம் | - | தோன்றுகை |
| உபகரணம் | - | துணைக்கருவி |
| உபகாரம் | - | உதவி |
| உல்லாசம் | - | களிப்பு |
| உற்பத்தி | - | விளைவாக்கம் |
| ஊனம் | - | குறைபாடு |
| எசமான் | - | தலைவன் |

ஐ

| | | |
|---|---|---|
| ஐதீகம் | - | சடங்கு, நம்பிக்கை |

க

| | | |
|---|---|---|
| கர்ப்பக்கிருகம் | - | கருவறை |

| | | |
|---|---|---|
| கர்மம் | - | செயல் |
| கலாச்சாரம் | - | பண்பாடு |
| கலாரசனை | - | கலைச்சுவை |
| கல்யாணம் | - | மணவினை, திருமணம் |
| கஷ்டம் | - | தொல்லை, துன்பம் |
| கம்பீரம் | - | பீடு |
| கரம் | - | கை |
| கவிதை | - | பா |
| காலி | - | வெறுமை |
| கீதம் | - | பாட்டு, இசை |
| கீர்த்தி | - | புகழ் |
| கீர்த்தனை | - | பாமாலை, பாடல் |
| கும்பாபிஷேகம் | - | குடமுழுக்கு |
| கோஷம் | - | ஒலி |
| கேவலம் | - | கீழ்மை |
| கேளிக்கை | - | பொழுதுபோக்கு |
| கோபம் | - | சினம் |
| கௌரவம் | - | மதிப்பு |

## ச

| | | |
|---|---|---|
| சகலம் | - | எல்லாம், அனைத்தும் |
| சகஜம் | - | வழக்கம் |
| சகி | - | தோழி |
| சகோதரி | - | உடன் பிறந்தவள் |
| சங்கடம் | - | இக்கட்டு, தொல்லை |
| சங்கதி | - | செய்தி |
| சங்கோஜம் | - | கூச்சம் |
| சதம் | - | நூறு |
| சதவீதம், சதமானம் | - | விழுக்காடு |
| சதா | - | எப்பொழுதும் |
| சதி | - | சூழ்ச்சி |
| சத்தம் | - | ஓசை, ஒலி |

| | | |
|---|---|---|
| சந்தானம் | - | மகப்பேறு |
| சந்தேகம் | - | ஐயம் |
| சந்தோஷம் | - | மகிழ்ச்சி |
| சபதம் | - | சூளுரை |
| சம்சாரம் | - | குடும்பம், மனைவி |
| சம்பந்தம் | - | தொடர்பு |
| சம்பவம் | - | நிகழ்ச்சி |
| சம்பாதி | - | ஈட்டு, பொருளீட்டு |
| சம்பிரதாயம் | - | மரபு |
| சம்மதி | - | ஒப்புக்கொள் |
| சரணாகதி | - | அடைக்கலம் |
| சரித்திரம் | - | வரலாறு |
| சரீரம் | - | உடல் |
| சருமம் | - | தோல் |
| சர்வம் | - | எல்லாம் |
| சமீப காலத்தில் | - | அண்மைக் காலத்தில்ஃசமகாலத்தில் |
| சதுரம் | - | நாற்கரம் |
| சரித்திரம் | - | வரலாறு |
| சக்தி | - | ஆற்றல், வலு |
| சஞ்சிகை | - | இதழ் |
| சத்தியம் | - | உண்மை, வாய்மை |
| சத்து | - | ஊட்டம் |
| சந்ததி | - | வழித்தோன்றல் |
| சமதர்மம் | - | சமனறம், பொதுமை |
| சமதானம் | - | அமைதி, இணக்கம் |
| சமஷ்டி | - | கூட்டமைப்பு |
| சரளம் | - | ஒழுங்கு |
| சவுக்காரம் | - | வழலை |
| சாதாரணம் | - | எளிமை, பொதுமை |
| சாமி/ஸ்வாமி | - | கடவுள்/தெய்வம்/இறைவன் |
| சாதித்தல் | - | நிறைவேற்றுதல், விடாது பற்றுதல் |
| சாதம் | - | சோறு |

| | | |
|---|---|---|
| சாந்தம் | - | அமைதி |
| சாகசம் | - | துணிவு, பாசாங்கு |
| சாராமிசம் | - | பொருட்சுருக்கம் |
| சாயந்திரம் | - | மாலை வேளை, அந்திப் பொழுது |
| சாவகாசம் | - | விரைவின்மை |
| சாஸ்திரம் | - | நூல் |
| சாசுவதம் | - | நிலை |
| சாட்சி | - | சான்று |
| சாரதி | - | ஓட்டுநர் |
| சாரம் | - | பிழிவு |
| சிகிச்சை | - | மருத்துவம் |
| சித்தாந்தம் | - | கொள்கை, முடிவு |
| சித்திரம் | - | ஓவியம் |
| சிநேகிதம் | - | நட்பு |
| சிம்மாசனம் | - | அரியணை |
| சிரத்தை | - | அக்கறை, கருத்துடைமை |
| சிரமம் | - | தொல்லை |
| சின்னம் | - | அடையாளம் |
| சீக்கிரமாக | - | விரைவாக |
| சுதந்திரம் | - | தன்னுரிமை, விடுதலை |
| சுத்தமான | - | தூய்மையான |
| சுபாவம் | - | இயல்பு |
| சுலபம் | - | எளிது |
| சுவாரஸ்யமான | - | சுவையான |
| சுகப் பிரசவம் | - | நலப் பேறு |
| சேவை | - | பணி |
| சேனாதிபதி | - | படைத்தலைவன் |
| சொர்க்கம் | - | பரமபதம் |
| சௌகர்யம் | - | வசதி, நுகர்நலம் |
| சௌக்கியம் | - | நலம் |

## த

தசம் - பத்து
தத்துவம் - உண்மை
தம்பதியர் - கணவன் மனைவி, இணையர்
தரிசனம் - காட்சி
தர்க்கம் - வழக்கு
தர்க்க வாதம் - வழக்காடல்
தகவல் - செய்தி
தரம் - தகுதி

தாபம் - வேட்கை
தாசன் - அடிமை
தாமதம் - காலநீட்டம் நேரந்தவறுகை

திகில் - அதிர்ச்சி
திருப்தி - நிறைவு
தினசரி - நாள்தோறும்
தினம் - நாள்
திராட்சை - முந்திரி
தியாகம் - கொடை, ஈகம்

தீர்க்கதரிசி - ஆவதறிவார்
தீபம் - விளக்கு

துரதிருஷ்டம் - பேறின்மை
துரிதம் - விரைவு
துரோகம் - வஞ்சனை
துவம்சம் - அழித்தொழித்தல், அழித்துத் தொலைத்தல்
தேகம் - உடல்
தேசம் - நாடு
தைரியம் - துணிவு

## ந

| | | |
|---|---|---|
| நட்சத்திரம் | - | விண்மீன், நாள்மீன் |
| நமஸ்காரம் | - | வணக்கம் |
| நர்த்தனம் | - | ஆடல், நடனம்,கூத்து |
| நவீனம் | - | புதுமை |
| நவீன பாணி | - | புது முறை |
| நாசம் | - | அழிவு, வீண் |
| நாசூக்கு | - | நயம் |
| நாயகன் | - | தலைவன் |
| நாயகி | - | தலைவி |
| நிஜம் | - | உண்மை, உள்ளது |
| நிசப்தமான | - | ஒலியற்ற, அமைதியான |
| நிச்சயம் | - | உறுதி |
| நிச்சயதார்த்தம் | - | மண உறுதி |
| நிதானம் | - | பதறாமை |
| நித்திய பூஜை | - | நாள் வழிபாடு |
| நிரூபி | - | மெய்ப்பி, நிறுவு |
| நிருவாகம் | - | மேலாண்மை |
| நிபுணர் | - | வல்லுநர் |
| நிமிடம் | - | மணித்துளி |
| நிரபராதி | - | குற்றமற்றவர் |
| நிதி | - | பொருள்,செல்வம், பணம் |
| நீதி | - | அறம், நெறி, அறநெறி, நடுவுநிலை, நேர், நேர்நிறை, நேர்பாடு, முறை |

## ப

| | | |
|---|---|---|
| பகிரங்கம் | - | வெளிப்படை |
| பஞ்சாட்சரன் | - | ஐந்தெழுத்து |
| பரவசம் | - | மெய்மறத்தல் |
| பராக்கிரமம் | - | வீரம் |
| பராமரி | - | காப்பாற்று , பேணு |

பரிகாசம் - இகழ்ச்சிச் சிரிப்பு
பரிசோதனை - ஆய்வு
பரீட்சை - தேர்வு
பலவந்தமாக - வற்புறுத்தி
பலம் - வலிமை
பலவீனம் - மெலிவு, வலிமையின்மை
பலாத்காரம் - வன்முறை
பக்தி - இறையன்பு
பஜனை - பத்திமை
பரீட்சார்த்த முறையில் - சோதனை முறையில்
பட்சணம் - பலகாரம் அல்லது நொறுக்குண்டி
பாணம் - அம்பு
பாதம் - அடி
பாரம் - சுமை
பால்யம் - இளமை
பிம்பம் - நிழலுரு
பிரகாசம் - ஒளி, பேரொளி
பிரகாரம் - சுற்று
(அதன்)பிரகாரம் - (அதன்)படி
பிரசங்கம் - சொற்பொழிவு
பிரசுரம் - வெளியீடு
பிரச்சினை - சிக்கல்
பிரதிநிதி - சார்பாளர்
பிரதிபலித்தல் - எதிரியக்கம்
பிரதிபிம்பன் - எதிருரு
பிரத்தியோகம் - தனி
பிரபலம் - புகழ், பரவல்
பிரமாதமான - பெரிய
பிரமிப்பு - திகைப்பு
பிரயோகி - கையாளு
பிரயோசனம் - பயன்
பிரவாகம் - பெருக்கு

| | | |
|---|---|---|
| பிரவேசம் | - | நுழைவு, புகுதல், வருதல் |
| பிரார்த்தனை | - | தொழுகை, |
| பிரியம் | - | விருப்பம் |
| பிரேமை | - | அன்பு |
| பிரச்சனை | - | சிக்கல் / இடர் |
| பீடிகை | - | முன்னுரை |

| | | |
|---|---|---|
| புண்ணியம் | - | நல்வினை |
| புத்தி | - | அறிவு |
| புத்திரன் | - | புதல்வன் |
| புனிதமான | - | தூய |
| புஷ்பம் | - | மலர், பூ |
| புஜபலம் | - | தோள்வன்மை |
| புனர் ஆவர்த்தம் | - | புதுப்பித்தல் |
| பூஜை | - | வழிபாடு |
| பூர்த்தி | - | நிறைவு |
| பூஷணம் | - | அணிகலம் |
| பூஜ்யம் | - | சுழியம் / பாழ் |
| போதனை | - | கற்பித்தல் |

## ம

| | | |
|---|---|---|
| மகான் | - | பெரியவர் |
| மகாயுத்தம் | - | பெரும்போர் |
| மத்தியஸ்தர் | - | உடன்படுத்துபவர் |
| மத்தியானம் | - | நண்பகல் |
| மந்திரி | - | அமைச்சர் |
| மனசு | - | உள்ளம் |
| மனிதாபிமானம் | - | மக்கட்பற்று |
| மானசீகம் | - | கற்பனை |
| மல்யுத்தம் | - | மற்போர் |
| மந்த ஹாசம் | - | மெல்லிய சிரிப்பு |

## ய

| | | |
|---|---|---|
| யந்திரம் | - | பொறி |
| யூகம் | - | உய்த்துணர்தல் |
| யூகி | - | உய்த்துணர் |
| யோக்யதை | - | தகுதி |

## ர

| | | |
|---|---|---|
| ரதம் | - | தேர் |
| ரத சாரதி | - | தேரோட்டி |
| ரசிகர் | - | சுவைஞர் |
| ரகசியம் | - | கமுக்கம் |
| ரசம் | - | சாறு, சுவை |
| ராணி | - | அரசி |
| ராத்திரி | - | இரவு |
| ராச்சியம் | - | நாடு,மாநிலம் |
| ராஜா | - | மன்னன் |

## ல

| | | |
|---|---|---|
| லட்சம் | - | நூறாயிரம் |
| லட்சணம் | - | அழகு |
| லட்சியம் | - | குறிக்கோள் |

## வ

| | | |
|---|---|---|
| வதம் | - | அழித்தல் |
| வதனம் | - | முகம் |
| வம்சம் | - | கால்வழி |
| வஸ்திரம் | - | துணி, ஆடை |
| வாஞ்சை | - | பற்று |
| வாயு | - | காற்று |
| விக்கிரகம் | - | வழிபாட்டுருவம் |
| விசாரம் | - | கவலை |
| விசாலமான | - | அகன்ற |

| | | |
|---|---|---|
| விசித்திரம் | - | வேடிக்கை |
| விஷேசம் | - | சிறப்பு |
| விஞ்ஞானம் | - | அறிவியல் |
| விவசாயம் | - | உழவு / வேளாண்மை |
| விஷயம் | - | செய்தி |
| விதானம் | - | மேற்கட்டி |
| விநாடி | - | நொடி |
| வித்தியாசம் | - | வேறுபாடு |
| விபூதி | - | திருநீறு , பெருமை |
| விமோசனம் | - | விடுபடுதல் |
| வியாதி | - | நோய் |
| விரதம் | - | நோன்பு |
| விவாகம் | - | திருமணம் |
| விவாதி | - | வழக்காடு |
| வேகம் | - | விரைவு |
| வேதம் | - | மறை |
| வேதவிற்பனன்ர் | - | மறைவல்லார் |
| வேதியர் | - | மறையவர் |
| வைபவம் | - | விழா |

## ஜ ("ஜ" ஒரு தமிழ் எழுத்தல்ல, கிரந்தம்)

| | | |
|---|---|---|
| ஜனநாயகம் | - | குடியாட்சி |
| ஜனம் | - | மக்கள் |
| ஜனனம் | - | பிறப்பு |
| ஜாதகம் | - | பிறப்புக் குறிப்பு |
| ஜாலம் | - | வேடிக்கை |
| ஜுரம் | - | காய்ச்சல் |
| ஜோதி | - | ஒளி |
| ஜோடி | - | இணை |
| ஜோடித்தல் | - | அழகு செய்தல் |

## ஸ ("ஸ" ஒரு தமிழ் எழுத்தல்ல, கிரந்தம்)

| | | |
|---|---|---|
| ஸந்ததி | - | கால்வழி |
| ஸமத்துவம் | - | ஒரு நிகர் |
| ஸமரசம் | - | வேறுபாடின்மை |
| ஸமீபம் | - | அண்மை |
| ஸம்ஹாரம் | - | அழிவு |
| ஸோபை | - | பொலிவு |
| ஸௌந்தர்யம் | - | பேரழகு |
| ஸ்தாபனம் | - | நிறுவனம் |
| ஸ்தானம் | - | இடம் |

## பொது

| | | |
|---|---|---|
| வினாடி | - | நொடி |
| நிமிடம் | - | மணித்துளி |
| மணித்தியாலம் | - | மணிநேரம் |
| மாதாந்திரம் | - | மாதந்தோறும் |
| வருஷம் | - | ஆண்டு |
| சமீப காலத்தில் | - | அண்மைக் காலத்தில் / சமகாலத்தில் |
| துக்கம் | - | துன்பம், துயர் |
| துரோகம் | - | இரண்டகம் |
| நாகசுரம் | - | நாயனம், ஏழில் |
| நீதிமன்றம் | - | அறமன்றம் |
| பயம் | - | அச்சம் |
| பயங்கரவாதி | - | கேடன், அச்சுறுத்தன் |
| பாண்டித்தியம் | - | புலமை |
| பாணி | - | சர்க்கரை குழம்பு, பாங்கு |
| பாலகன் | - | குழந்தை |
| பாவம் | - | ஊழ்கம் |
| பாஷை | - | மொழி |
| பிச்சை | - | இரப்புணவு |
| பிதா | - | தந்தை |

பிரகடனம் - வெளிப்படுத்துகை
பிரதியுபகாரம் - கைம்மாறு
பிரதிவாதி - எதிராளி
பிரபு - வளமான், பெருஞ்செல்வன்
பிரமுகர் - பெருஞ்சிறப்பர்
பிராணி - உயிரி
பிராமணன் - பார்ப்பன்
பிரேரணை - முன்வைப்பு
பீதி - அச்சம்
புவி - உலகம்
புனிதம் - நனிதூய்மை
புருசன் - கணவன், ஆடவன்
பேட்டி - நேர் காணல்
பேதம் - வேறுபாடு
போதை - களியேற்றம், மயக்கம்
பௌர்ணமி - நிறைமதி
பௌதீகம் - இயற்பியல்
மகா - பெரு (மகாகவிஸ்ரீ பெரும் பாவலன்...)
மத்தியரேகை - நண்ணிலக்கோடு
மத்தியானம் - நண்பகல், நடுப்பகல்
மரணம் - இறப்பு, சாவு
மரணதண்டனை - சாவுஒறுப்பு
மாமிசம் - ஊன், இறைச்சி
மிருகம் - விலங்கு
மிலேச்சன் - இழிஞன்
முக்கியம் - முதன்மை
முகூர்த்தம் - ஸ்ரீ வேளை, நேரம்
மூலாதாரம் - அடிப்படை, மூலம்
மேகம் - கொண்டல், முகில்
மேளம் - பதலை
மையம் - நடு, நடுவண்
மோதகம் - இன்னப்பம்

மௌனம் - பேசாமை
யதார்த்தம் - இருப்புநிலை, உண்மைநிலை
யாகம் - வேள்வி
யாத்திரை - உலா
யோக்கியன் - நேர்மையாளன், நற்குணத்தான்
யுக்தி - அறிவுரை
யுத்தம் - போர்
ரொக்கம் - முழுத்தொகை
ரோசம் - மானம்
வக்காலத்து - ஒப்புகையாவணம்
வக்கீல் - வழக்கறிஞர்
வதந்தி - புரளி, பொய்ப்பரப்புரை
வயது - அகவை
வர்க்கம் - வகை, தொகுதி
வர்ணம் - நிறம், வண்ணம்
வர்த்தகம் - வணிகம்
வனம் - காடு ,உறைவிடம்
வார்த்தை - சொல்
வாவி - நீர்நிலை
விகடகவி - நகைச்சுவைப்புலவர்
விகாரம் - மாறுபாடு
விசேடம் - சிறப்பு
வித்தியாசம் - வேறுபாடு
வித்தியாசாலை - கல்விக்கழகம்
விதவை - கைம்பெண்
விநியோகம் - வழங்கல்
விநோதம் - புதுமை
விமானம் - வானூர்தி
விமோசனம் - விடிவு, நீங்குகை
வியாக்கினம் - விளக்கவுரை
வியாபாரம் - வணிகம்
விரக்தி - வெறுப்பு

| | | |
|---|---|---|
| விருது | - | பட்டம், வெற்றியாரம் |
| விவேகம் | - | நுண்ணறிவு |
| விற்பனன் | - | அறிவுடையோன் |
| விசம் | - | நஞ்சு |
| விசமி | - | தீயவன் |
| விசயம் | - | செய்தி |
| வீரியம் | - | ஆற்றல், வலிமை |
| வேதனம் | - | ஊதியம் |
| வேதனை | - | வருத்தம் , நோவு |
| வைத்தியசாலை | - | மருத்துவமனை |
| வைராக்கியம் | - | விடாப்பிடி |
| ஜலம் | - | நீர், தண்ணீர் |
| ஜலதோசம் | - | சளிபபு , நீர்க்கோவை |
| ஜாக்கிரதை | - | எச்சரிக்கை |
| ஜீவன் | - | உயிர் |
| ஜெயந்தி | - | பிறந்தநாட்பெருவிழா |
| ஜெபம் | - | வழிபாடு |
| ஜெயம் | - | வெற்றி |
| ஜோதி | - | ஒளி, பிழம்பு |

# எது தமிழ்ப்புத்தாண்டு?

**வி.இ. குகநாதன்**

பொதுவாக சனவரி ஒன்றில் ஆங்கிலப்புத்தாண்டைப் புதுவருடமாக உலகளாவியரீதியில் மக்கள் கொண்டாடிவருகின்றபோதும் ஒவ்வொரு இனமும் தனக்கெனத்தனியான ஒரு புதுவருடக் கொண்டாட்டத்தினையும் நடாத்தி வருவதானது அவர்களின் தனித்துவத்தினையும், பண்பாட்டினையும் பேணிவரும் ஒரு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. இந்தவகையில் தமிழரிற்கெனவும் ஒரு புத்தாண்டு கொண்டாடப்படவேண்டும் என்பதில் யாரிற்கும் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அப்புத்தாண்டு தையிலா அல்லது சித்திரையிலா என்பதிலேயே குழப்பம் காணப்படுகிறது. இன்று ஈழத்திலும் சரி, தமிழகத்திலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி தமிழர்களில் பலர் சித்திரையிலேயே தமிழ்ப் புத்தாண்டு என நம்பவைக்கப்பட்டுள்ளனர். இதனைப் பற்றிய ஒரு சிறிய ஆய்வாகவே இக் கட்டுரை அமைந்துள்ளது.

**சித்திரைப் புத்தாண்டு கணிப்பீட்டுமுறை :**

சித்திரைப்புத்தாண்டு கணிப்பீட்டு முறையானது சாலிவாகணன் என்ற அரசனால் (சிலர் கனிஷ்கன் என்கின்றனர்) கி.பி 78ம் ஆண்டளவில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது எனக் கூறப்படுகிறது. இக் கணிப்பீட்டின்படி சுக்கில, விரோதி, துன்மதி போன்ற அறுபது ஆண்டுகள் கணிப்பிடப்பட்டு சுழற்சிமுறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்படி இப்போது நடைபெறுவது துர்முகி ஆண்டாகக்கருதப்படுகிறது. இத்தகைய கணிப்பீட்டு முறைக்கு அடிப்படையாக ஒரு புராணக்கதை கூறப்படுகிறது.

**சித்திரைப்புத்தாண்டு பற்றிய புராணக்கதை :**

அபிதான சிந்தாமணி என்ற நூலில் 1392ஆம் பக்கத்தில் கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. ஒருமுறை நாரதமுனிவர், "கடவுள்" கிருஷ்ணனை "நீங்கள் அறுபதினாயிரம் கோபிகைகளுடன் கூடி இருக்கின்றீரே, எனக்கு ஒரு பெண்ணையாவது தரக்கூடாதா?" என்று கேட்டாராம். அதற்குக் கிருஷ்ணன், "நான் உடன் இல்லாமல் வீட்டில் தனியாய் இருக்கும் பெண்ணை நீ எடுத்துக்கொள் என்றாராம். இதற்கு நாரதர் உடன்பட்டு அறுபதாயிரம் வீடுகளிலும் சென்று பார்த்தார். ஆனால் எங்கும் கிருஷ்ணன் இல்லாத பெண்களைக் காண முடியாததால், நாரதர் மீண்டும் கிருஷ்ணனிடமே வந்து அவர் திருமேனியில் மோகம் கொண்டு அவரை நோக்கி "நான் உங்களிடமே பெண்ணாக இருந்து

உடலுறவு கொள்ள விரும்புகிறேன்" என்றார். கிருஷ்ணன் நாரதரை "யமுனையில் குளித்தால் பெண்ணாய் மாறுவாய்" எனச் சொல்ல, நாரதர் அவ்வாறே செய்து, ஓர் அழகுள்ள பெண்ணாக மாறினாராம் . பின் "கடவுள்" கிருஷ்ணனுடன் அறுபது வருடம் உடலுறவு கொண்டு , அறுபது மகன்களைப் பெற்றார். அவர்கள் பிரபவ தொடங்கி அட்சய எனப் பெயர் பெற்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆண்டாகும் வரம் பெற்றார்கள். இப்படித்தான் சித்திரை முதல் நாளில் ஆரம்பிக்கும் புத்தாண்டு வரலாறு செல்கிறது.

**தைப் புத்தாண்டு கணிப்பீட்டுமுறை:**

பழந் தமிழர்கள் காலத்தினை பருவகாலங்களை அடிப்படையாகக் கொண்டு ஆறு பிரிவுகளாகப்பிரித்திருந்தனர். அவையாவன

1. இளவேனில் - தை, மாசி
2. முதுவேனில் - பங்குனி, சித்திரை
3. கார்காலம் - வைகாசி, ஆனி
4. கூதிர்காலம் - ஆடி, ஆவணி
5. முன்பனி - புரட்டாசி, ஐப்பசி
6. பின்பனி - கார்த்திகை, மார்கழி

இந்தப்பகுப்பினடிப்படையில் இளவேனில் காலத்தினை ஆண்டின் தொடக்கமாகக்கொண்டு தையிலேயே வருடப்பிறப்பினைக்கொண்டாடி வந்துள்ளார்கள். இப்போது சிலர் சித்திரையே இளவேனில் காலம் எனக் கூறலாம், ஆனால் தாயகத்தின் காலநிலையினைப் பொறுத்தவரையில் சித்திரை இளவேனிற்காலம் என்பதற்கு பொருந்தாது, மாறாக தையே இளவேனில் காலத்திற்கும் வருடத்தொடக்கத்திற்கும் சிறப்பாகப்பொருந்தும். இதற்கான ஆதாரத்தினை நாம் சங்க இலக்கியங்களான நற்றிணை,குறுந்தொகை, புறநானூறு என்பனவற்றில் காணலாம். (எடுத்துக்காட்டு- தைத்திங்கள் தண்கயம் படியும்-நற்றிணை, தைத்திங்கள் தண்கயம் போல- புறநானூறு). இவற்றினடிப்படையிலேயே தமிழர்களிடம் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற முதுமொழி இன்றும் நடைமுறையிலுள்ளது.

இவ்வாறு தமிழர்களால் சங்ககாலம் முதல் முதல் கொண்டாடப்பட்டு வந்த தைத்திருநாளானது கி.பி முதலாம் நூற்றாண்டளவில் பார்ப்பனியர்களின் மதரீதியான ஊடுருவல் மூலமாக சித்திரைக்கு மாற்றப்பட்டது. அதற்குப் பின்னரே தமிழர்களிடம் இந்தப் புத்தாண்டுக் குழப்பம் ஏற்பட்டது.

குழப்பத்திற்கான அறிஞர்களின் தீர்வு:

இக் குழம்பத்திற்கு தீர்வு காணும்பொருட்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1921இல் மறைமலை அடிகளார் தலைமையில் 500 அறிஞர்கள் ஒன்றுகூடி தை முதலே தமிழ்ப்புத்தாண்டு என முடிவு செய்திருந்தனர். பின்பு அதேபோன்று திருவள்ளுவரின் பிறப்பினை அடிப்படையாகக்கொண்டு ஆங்கில ஆண்டுடன் 31 ஆண்டுகளைக்கூட்டி திருவள்ளுவர் ஆண்டு தமிழாண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பார்ப்பனிய ஊடகங்களால் இச் செய்தி இருட்டடிப்புச் செய்யப்பட்டது. பின்பு 2006 இல் கருணாநிதியின் ஆட்சியில் தமிழக அரசால் தைத்திங்களே புத்தாண்டாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. பின்பு (மீண்டும் ஒரு பார்ப்பன ஆட்சியில்) ஜெயலலிதா ஆட்சியில்2011 இல் சித்திரையாக மாற்றப்பட்டது ஒரு வரலாற்றுச் சோகமேயாகும்.

புலிகளின் தை புதுவருடப்பிரகடனம் :

இக் காலப்பகுதியில் ஈழத்திலும் தைமுதலே புத்தாண்டாக விடுதலைப்புலிகளால் தமது அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கும் வரலாற்றுச் சோகமாக புலிகளின் அழிவிற்குப்பிறகு அந்த முயற்சி தொடரப்படவில்லை. புலிகளின் தியாகத்தினை வைத்து பிழைப்பு நடாத்திவரும் தமிழ் அரசியல்வாதிகளோ அல்லது புலம் பெயர் அமைப்புக்களோ இதில் எந்தவித அக்கறையுமின்றியிருப்பது அவர்களின் பிழைப்புவாதத்தினை மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்துகிறது.

அறிவியல் பொருத்தப்பாடு :

வரலாறு, சொந்த விருப்பு வெறுப்புகளிற்கப்பால் அறிவியல்ரீதியாக தைத்திருநாளா அல்லது சித்திரைக் கணிப்பீடா பொருத்தம் எனப்பார்ப்போம். முதலாவதாக திருவள்ளுவர் ஆண்டானது எண்களில் வருவதனால் சிறப்பானது. மறுபுறத்தில் சித்திரைக்கணிப்பீடானது ஒரே பெயர்களில் 60 ஆண்டுகளிற்கொரு முறை மறுபடியும் வருவதனால் குழப்பகரமானவை. மேலும் இப்பெயர்கள் எதுவுமே தமிழில் இல்லாதிருப்பதுடன் அவற்றின் கருத்துக்கள் ஆபாசமானவை அல்லது எதிர்மறையானவை. (உதாரணமாக சுக்கில-விந்து, துன்மதி-கெட்டபுத்தி).

இரண்டாவதாக ஒருவரின் (திருவள்ளுவரின்) வாழ்க்கைக் காலத்தினை அடிப்படையாகக்கொண்ட கணிப்பீடானது அனைத்துகை நடைமுறைகளுடன் ஒத்துப்போகின்றது.மறுபுறத்தில் சித்திரைக் கணிப்பீட்டிற்கான நாம் ஏற்கனவே பார்த்த புராணக்கதையினை மதநம்பிக்கையாளரில் பெரும்பாலானோரே

நம்பமாட்டார்கள். அதேபோன்று சித்திரைக்கணிப்பீட்டிற்கு சொல்லப்படும் இராசிக்கணிப்பும் அறிவியலிற்கு முரணான புவிமையக்கொள்கையினை அடிப்படையாகக்கொண்டது.

மூன்றாவதாக சங்க இலக்கியங்களினடிப்படையில் வரலாற்று த்தொன்மையானதாக க்காணப்பட, மறபுறத்தில் சித்திரை வருடப்பிறப்பானது இடைக்காலத்தில் வெளியாரின் திணிப்பால் உள்நுழைக்கப்பட்டதாகக் காணப்படுகிறது.

நான்காவதாக தைத்திருநாளானது மதசார்பற்றதாகக் காணப்படுவதால் எல்லாத் தமிழரும் கொண்டாடக்கூடியதாகவிருக்க, மறுபுறத்தில் சித்திரையானது இந்துக்களிற்கு மட்டுமே அதுவும் பார்ப்பன ஆதிக்கத்தினை ஏற்றுக் கொண்டவரிற்கே பொருந்தும். இறுதியாக தைத்திருநாளானது தமிழரின் வாழ்க்கையுடன் இணைந்தும், உழவுத்தொழிலுடன் தொடர்பானதாகவும் காணப்படுகிறது.

முடிவாகக்கூறின் தைத்திருநாளினை தைப்பொங்கலாக மட்டும் சுருக்காமல் தமிழரின் புத்தாண்டாகவும் கொண்டாடுவதே பொருத்தமானது. பாவேந்தரின் பாடலுடன் இக் கட்டுரையினை முடிப்பதே சிறப்பானதாக அமையும்.

" நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரை இல்லை உனக்குப் புத்தாண்டு
அண்டிப்பிழைக்க வந்த ஆரியக்கூட்டம் கற்பித்ததே
அறிவுக்கொவ்வா அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழனுக்கு
தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!"

- பாவேந்தர் பாரதிதாசன்.

# முருகன் தமிழ்க் கடவுளா?

வி.இ. குகநாதன்

முருகன் தமிழ்க்கடவுள் என்பது காலகாலமாக இருந்துவரும் ஒரு கருத்தாயினும், அண்மைக் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்புடைய உரையாடல்களால் மீண்டும் ஒருமுறை கவனம் பெற்றுள்ளது. அண்மையில் ஒரு தமிழ்த்தொலைக்காட்சியிலேயே (விஜய் தொ.கா) "தமிழ்க்கடவுள் முருகன்" என்ற தொடர் ஒளிபரப்பப்படுமளவிற்கு இக்கருத்து பரவலடைந்துள்ளது. உண்மையில் முருகன் தமிழ்க்கடவுளா? என்ற கேள்விக்குப் பதிலளிப்பதே இக் கட்டுரையின் நோக்கம். இதற்கு நேரடியாக பதிலளிப்பதற்கு முன் சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியிருப்பதால், இதற்கான பதிலினை கட்டுரையின் இறுதியில் பார்ப்போம்.

**பழங்காலத் தமிழர் வழிபாடுகளில் முருகன்:**

முதலில் பழங்காலத்தில் தமிழர்கள் முருகனை வழிபட்டார்களா எனப் பார்ப்போம். பழைய வரலாறுகளிற்குச் சான்றாகப் பொதுவாக தொல்பொருளாய்வுச் சான்றுகளையும், பழைய இலக்கியங்களையும் கொள்வர். இவ்வாறான தொல்பொருள் சான்றாக நடுகல் வழிபாட்டினைக் காட்டி நிற்கும் நடுகற்கள் காணப்படுகின்றன. தமிழரும், அக்காலத்தில் வாழ்ந்த பிற இனத்தினரைப் போன்று, முதலில் மூதாதையோரை வழிபட்டு வந்தனர். இம் மூதாதையர் வழிபாட்டினை நினைவூட்டும் ஈம அடக்கங்கள், ஈமப்படையல்களின் எச்சங்கள் என்பன தமிழகத்தில் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் கந்தரோடை போன்ற இடங்களிலும் அகழ்வராட்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டன (1). இத்தகைய மூதாதையர் வழிபாட்டு முறையின் ஒரு பகுதியாக மரித்தோர் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இதே முறையில் போரில் வீரச்சாவு அடைந்தவர்களிற்கு நடுகற்கள் நடப்பட்டன. மூதாதையர் நடுகல் வழிபாட்டிலிருந்தே வீரர்களிற்கான நடுகல் வணக்கமுறை தோன்றியதாக கலாநிதி கைலாசபதி நிறுவுவார்(2). பழங்காலத்தில் நடுகல் வணக்கம் தவிர வேறு கடவுள் வழிபாடு இல்லை என்பதனை மாங்குடி கிழார் "அடலருந் துப்பின்" என ஆரம்பிக்கும் பாடலில்

"கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே."

என புறநானூறில் பாடுவார் (3). இத்தகைய முன்னோர் மற்றும் வீரர்களின் நடுகல் வழிபாடும் ஒரு வகை முருக வழிபாடாகக் கருதப்பட்டது. இத்தகைய நடுகல்லான கல் தூண் என்பதையே சுருக்கி கந்து எனக்கூறிப் பின்னர் கந்தன் (ஸ்கந்தா Skanda

என்பது வேறு) என அழைக்கப்பட்டது எனவும் கூறுவர். மேற்கூறியவாறு இத்தகைய நடுகல் வழிபாடு ஒரு வகைப் பழங்காலத் தமிழரின் முருக வழிபாடாகும்.

இதே போன்று குறிஞ்சி நிலத் தலைவனாகவும் முருக வழிபாடு காணப்பட்டது. இதனையே தொல்காப்பியம் "சேயோன் மேய மைவரை உலகமும்..." எனப்பாடும். அதாவது மலைசார்ந்த பகுதிகளில் தமிழர்கள்/ தமிழர்களின் முன்னோர் வாழ்ந்தபோது, அப் பகுதியின் தலைவனாக சேயோன் / முருகன் கருதப்பட்டார். இதே போன்று இயற்கை வழிபாடான சூரிய வழிபாட்டின் மருவிய வடிவமும் மற்றொரு வகை முருக வழிபாடாயிற்று என சாரங்கபாணி எனும் அறிஞர் பரிபாடற் திறன் எனும் நூலில் "மாக்கடலினின்று நிவர்ந்தெழுந்த - செவ்வேள்" எனக் குறிப்பிட அதனை மறைமலை அடிகளாரும் பின்னர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

முருகனின் மற்றொரு வடிவம் வேலினை அடிப்படையாகக்கொண்ட வேலன் ஆகும். பழங்கால முன்னோர் வேட்டையினையும், உணவு சேகரித்தலையும் அடிப்படையாகக்கொண்டு வாழ்ந்த காலத்தில் தோன்றியதே இந்த வேலன் எனும் வடிவமாகும். வேட்டையினை முடித்து வந்தவர்கள் மீண்டுமொரு முறை வேட்டையில் நடந்தவற்றை செய்து பார்த்தனர். இதன்போது நாடகம், கூத்து என்பன தோன்றியதாகவும், இதன்போது வேலை ஏந்துபவன் வேலனாகக் கருதப்பட்டான். இவ்வாறான காலப்பகுதியில் பூசாரி வேல் ஏந்தி உருக்கொண்டதாக எண்ணிக்கொண்டு ஆடும் ஆட்டமே வெறியாட்டு என கலாநிதி க. கைலாசபதி கூறுகிறார்(4). இத்தகைய வெறியாட்டத்தின்போது வேலை ஏந்துபவரும் வேலனாகவே கருதப்பட்டார்.

மேற்குறித்த பலவகையான பழந்தமிழ் வழிபாடுமுறைகள் நமது முன்னோர்களிடம் காணப்பட்டன என்பது எவளவு உண்மையோ அதேயளவிற்கு உண்மை யாதெனில் இன்றைய நிலையிலுள்ள வழிபாடுமுறைகள் எதுவும் அன்றைய முறைகளுடன் அறவே தொடர்பற்றன என்பதாகும். இதனை விளங்கிக்கொள்வதற்கு நாம் முருகன் சுப்பிரமணிய ஸ்வாமி / ஸ்கந்த (Skanda) ஆகிய கதையினை அறிந்துகொள்ளவேண்டும்

**ஆரியப் படையெடுப்பால் சுப்பிரமணிய ஸ்வாமியாகிய முருகன் :**

இற்றைக்கு சுமார் 5000 ஆண்டுகளிற்கு முன்னர் (பொதுயுகத்திற்கு முந்திய 3000 ஆண்டளவில்/ BCE 3000) இடம்பெற்ற ஆரியப்படையெடுப்பானது

இந்தியப் பழங்குடி மக்களிற்கு மட்டுமல்லாமல், அவர்களின் இயறகையோடு ஒன்றிய வழிபாட்டுமுறைகளிற்கும் இருண்ட காலத்தினைக் கொண்டுவந்தது. ஆரியப் பார்ப்பனர்கள் முதலில் அக்கினி, இந்திரன், சோமன் போன்ற கடவுள்களிற்கே முக்கியத்துவம் கொடுத்து வழிபட்டதுடன், அவற்றையே ஏனையோரிடமும் பரப்பவும் முனைந்தனர். இதனை நாம் ரிக், யசூர் ஆகிய வேதங்களில் அக் கடவுள்களிற்கு கொடுத்த முக்கியத்துவத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். இன்று இந்துக்களிடையே பரவலடைந்துள்ள எந்தவொரு கடவுளும் அன்று வேதங்களில் முக்கியம் பெற்றிருக்கவில்லை.

இதற்கு சுப்பிரமணிய ஸ்வாமியாகிய ஸ்கந்தாவும் விதிவிலக்கல்ல. ஸ்கந்தா (Skanda) என்பவர் குமார (Kumara) என்ற பெயருடன் அக்னியுடன் தொடர்புள்ளவராக ரிக் வேதத்தில் முதன்முதலில் காணப்படுகிறார் (5). வேதத்தின் மற்றொரு பகுதியில் ஸ்கந்தா ருத்திரா - Rudra (பிற்காலத்தில் சிவனாகப்போகும் ருத்திரா) உடன் தொடர்புடையவராக, சிறு குற்றவாளிகளின் (The lord of petty criminals) அதிபதியாகக் காணப்படுகிறார்(6). இவ்வாறு வேதங்களில் முக்கியத்துவமிளந்து சிறு சிறு இடங்களில் காணப்பட்ட ருத்திரா, ஸ்கந்தா போன்ற கடவுள்கள் திடீரென முக்கியத்துவம் பெற்று விஸ்வரூபம் எடுப்பதற்கு ஒரு வரலாற்றுப் பின்னனி காரணமாகவுள்ளது. பார்ப்பனியப் பிற்போக்குக் கருத்தியலிற்கு எதிராக பவுத்தப்புரட்சி ஒன்று பொ.முந்திய ஆறாம் நூற்றாண்டளவில் (BCE 6th century) ஏற்பட்டு இந்தியா முழுவதும் பரவலடைந்தது. இந்தப் பவுத்தப் புரட்சியினை எதிர்கொண்டு தமது பார்ப்பனிய ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு பார்ப்பனர்கள் தமது அக்கினிக்குப் பலியிட்டு வழிபடும் முறையினைக் கைவிட்டு ஆதிக்குடிகளின் வழிபாட்டுத் தெய்வங்களைத் தமது வேத காலக் கடவுள்களுடன் இணைத்து பல புராணக்கதைகளை உருவாக்கினார்கள். இந்தப் பின்புலத்திலேயே ஏனைய தொல்குடி மக்களின் வழிபாட்டுமுறைகள், வேதத்தில் வரும் ஸ்கந்தா,குமாரா போன்றவர்கள், உபநிடதங்களில் வந்த சனத்குமார் (Sanath Kumar) என்ப வற்றுடன் தமிழர்களிடையே இருந்த பல்வேறுவகைப்பட்ட முருக வழிபாட்டு முறைகளையும் இணைத்து சுப்பிரமணிய ஸ்வாமி உருவாக்கப்பட்டார். இதுவே சுப்பிரமணிய ஸ்வாமி தோன்றிய வரலாறாகும் (7). இவ்வாறான பல்வேறு கடவுளின் தொகுப்பாக அமைந்ததாலேயே வேறு எந்தக் கடவுள்களிற்கு மில்லாதளவில் சுப்பிரமணிய ஸ்வாமிக்கு அதிகளவில் பெயர்கள் இருப்பதும், அவரின் பிறப்பு, வளர்ப்புடன் தொடர்புடையதாகப் பல பெற்றோர்கள் (ருத்திரா, பார்வதி, அக்கினி, கார்த்திகைப் பெண்கள்)காணப்படுவதும் அமைந்துள்ளது.

இவ்வாறு முற்றிலும் பார்ப்பன மயப்படுத்தப்பட்ட ஸ்கந்தா என்ற போர்க் கடவுள் குப்தர் காலத்தில் இந்தியா முழுவதும் பரவலடைந்திருந்த போதும், குப்த பேரரசின் வீழ்ச்சியுடன் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் வீழ்ச்சியடைய, தமிழ் நாட்டில் மட்டுமே பழந்தமிழர்களின் பண்பாட்டுடன் இணைக்கப்பட்டிருந்த காரணத்தால் முக்கியத்துவமிளக்காமலிருந்தது. இந்தப் போர்க்கடவுளின் ஒன்றிணைப்பு மூலமான தோற்றத்தினை நியாயப்படுத்தும் நோக்கில் ஸ்கந்த புராண (Skanda Purana) உருவாக்கப்பட்டது. இதனையடிப்படையாகக் கொண்டு இப்புராணக் கதையினை தமிழர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக கந்தபுராணம் எனும் புராணம் கச்சியப்ப சிவாச்சாரியாரால் தமிழில் இயற்றப்பட்டது.

**கந்த புராணத்தின் முரண்கள் :**

கந்த புராணத்தை எவளவோ சிரத்தை எடுத்து இயற்றியபோதும் அதில் பல தர்க்கரீதியான முரண்கள் காணப்படுகின்றன. குறிப்பாக சுப்பிரமணிய ஸ்வாமி சூரனை அழித்து அவனை மயில் வாகனமாகவும் சேவற்கொடியாகவும் ஆக்கியதாக கந்தபுராணம் பாடும். அவ்வாறாயின் அதற்கு முன்னரே சிறுவனாகவிருக்கும்போதே பிள்ளையாருடன் மாம்பழத்திற்கு சண்டையிட்டு மயிலேறி உலகம் சுற்றியது எவ்வாறு என்ற கேள்வி எழும். தூங்கும் குழந்தைகள் உட்பட மொத்த ஊரையே கடலுள் மூழ்கடித்தவர் ( "முஞ்சு தானை களார்ப்பொடு குழீ" பாடல்- படத்தில் காண்க) எவ்வாறு கருணையே உருவான கடவுளாக முடியும். இவ்வாறான முரண்கள் கந்த புராணத்தில் காணப்படுவதாலேயே தமிழக கிராமப்புறங்களில் ஒருவர் நம்ப முடியாத பொய்களை / புழுகுகளைக் கூறும்போது, "இந்தப் புழுகு கந்த புராணத்திலும் இல்லாத புழுகு" எனக் கூறுவார்கள். (இதனை சில பக்தர்கள் "கந்த புராணத்தில் இல்லாதது வேறு எந்த புராணத்திலும் இல்லை" என மாற்றிக்கூறிவருகின்ற போதிலும் முன்னையதே நாட்டுப்புற வழக்கிலுள்ளது).

**முருக வழிபாட்டின் இன்றைய நிலை:**

பழந் தமிழர்களிடையே காணப்பட்ட இயற்கையோடு ஒன்றியும், அவர்களுடைய வாழ்வியலுடனும் கலந்திருந்த முருக வழிபாட்டின் பல்வேறு வடிவங்களும் இன்று பார்ப்பனப் புராணக்கதைகளிற்குட்பட்டு வேறு ஒரு வடிவிலேயே உள்ளது. இன்னும் கடுமையாகப் பார்த்தால் தமிழர்களிற்கு எதிரான நிலையினை இன்றைய முருகவழிபாடு எடுத்துள்ளதனை சூரன்போர், சமசுகிரதத்திலேயே முருகனிற்கு பூசை என்ற இடங்களில் காணக்கூடியதாக வுள்ளது. தமிழர்களுடைய கோயில்களில் சமசுகிரதத்தில் பூசை நடைபெறும் போதே" தமிழ் நீசபாசை" என்பதனை ஏற்றுக்கொள்வதாகவே பொருளாகிறது.

இன்று தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் "தமிழ்க்கடவுள் முருகன்" எனும் தொடரும் முற்றுமுழுதாக ஸ்கந்த புராணக்கதையினை அடிப்படையாகக் கொண்டுள்ளதே தவிர மாறாக பழந்தமிழர் வாழ்வியலையோ அல்லது அவர்களின் வழிபாட்டையோ சிறிதும் பிரதிபலிக்கவில்லை.

**முருகன் தமிழ்க் கடவுளா? கேள்விக்கான பதில்:**

இப்போது கேள்விக்கான பதில் காண்பதற்கான நேரம் வந்துவிட்டது. இங்கு பதில் காண்பதற்கு முன் கேள்வியினை முழுமையாக உள்வாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. முருகன் பற்றித் தேவையானளவு மேலே ஏற்கனவே பார்த்துள்ளோம். அடுத்த சொல்லான தமிழ் என்பது "அ" முதலிய 247 எழுத்துக்களையுடைய நமது மொழியைக் (பழைய வட்டெழுத்துக்கள், தமிழி, பேச்சுமொழி உள்ளடங்கலாக) குறிக்கும். இறுதிச் சொல்லான கடவுள் என்பது சற்றுச் சிக்கலானது. அகராதியின் படி கடவுள் (God) என்பவர் அண்டம் (Universe) முழுவதையும் படைத்துக் காப்பவர் என்றும், அவர் எல்லாச் சக்திகளும் பொருந்தியவர் (Supreme power) என்றும், எல்லாச் செயல்களிற்கும் காரணமானவர் எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறார். இப்போது பதிலிற்கு வந்தால் முருகன் தமிழ்க்கடவுளா என்பதற்கு முன் தமிழிற்கு எனத் தனியாகக் கடவுள் இருக்கலாமா எனப் பார்த்தால் பதில் கடவுளின் வரைவிலக்கணப்படி இல்லை என்பதேயாகும். விளங்கக் கூறின், ஒரு வாதத்திற்கு கடவுள் இருக்கிறார் எனக்கொண்டாலும் அவர் இந்த பிரபஞ்சம் முழுவதற்கும் பொதுவானவாராக இருப்பாரேயன்றி மாறாக தமிழர்களிற்கு முருகன், சமசுகிரத ஆரியரிற்கு இராமர், ஐரோப்பியரிற்கு இயேசு, அராபியரிறகு அல்லா என இருக்கமுடியாது.

இதுவரைப் பார்த்தவற்றைச் சுருக்கமாகக் கூறினால், முருகனின் (கொற்றவை போன்றவையும்) பல்வேறு நிலைகளிலான வழிபாட்டு முறைகள் எமது முன்னோர்களிடம்/பழந் தமிழர்களிடம் காணப்பட்டன. அவையெல்லாம் இன்றைய நிலையில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு உட்பட்டு முற்றுமுழுதாக உரு மாறிவிட்டன. அவற்றினை மீட்டெடுக்காமல் வெறுமனே முருகன் தமிழ்க்கடவுள் எனக்கூறுவது பார்ப்பனியத்திற்கு முண்டுகொடுக்கும் வேலையேயன்றி வேறில்லை. அவ்வாறு மீட்டாலும், அதற்குப் பின்னர்கூட , இன்றைய அறிவியல்நிலையில் "எல்லாம் வல்ல கடவுள்" என்ற வரைவிலக்கணத்திற்குள் அடைக்கத்தேவையில்லை, மாறாக பழந்தமிழ்க் கலை-பண்பாட்டு வரலாற்று அடையாளங்களாகக்கொள்ளலாம்.

துணை நின்றவை :


1. பொ. இரகுபதி- பெருங்கற்கால யாழ்ப்பாணம் (பக்கம்6-7)
2. க. கைலாசபதி- பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். (பக்கம்37)
3. புறநானூறு- பாடல் 335
4. க. கைலாசபதி- பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். (பக்கம்172)
5. Pandit Pundalik Madhav (1967). translation of The Rigveda Samhita Vol 1. (p 167)
6. Narayan Aiyangar (1987). Kumara in Essays on Indo-Aryan Mythology Vol 1 (p 29)
7. Nath Vijay (2001). Acculturation Process Mythicised in Puranas and Acculturation: A Historico-Anthropological Perspective. (pp 98-99)

# செம்மொழியான தமிழின் தனிச் சிறப்பு

இன்று உலகில் ஆயிரக்கணக்கான மொழிகளிருந்தாலும் அவற்றின் தொன்மை, இலக்கியச்செழுமை, வரலாறு போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு 7 மொழிகள் மட்டுமே செம்மொழிகளாக உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் தமிழும் ஒன்று.

இவ்வாறு 7 மொழிகள் செம்மொழிகளாகவுள்ளபோதும் அவற்றில் தமிழும், சீன மொழியும் மட்டுமே பெருமளவிற்கு பேச்சுமொழியாகவும், கணனிப் பயன்பாட்டிலும் உள்ளன. உதாரணமாக சமசுகிரதத்தை எடுத்தால் வெறும் 14135 பேர் மட்டுமே அதனை தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். (source: Census of India. 2001. Office of the Registrar and Census).

ஒரு மொழி செம்மொழியாகக் கருதப்படுவதற்கு 11 தகமைகள் தேவை. அவையாவன

1. பழமையானது- Antiquity
2. தனித்தன்மையானது- Individuality
3. பொதுவான பண்புகள்- Common characters
4. நடுநிலையானது- Neutrality
5. பெற்றோர் உறவு - Parental kinship
6. கலை,பண்பாடு- Culture & Art
7. மொழியின் விடுதலைத்தன்மை (சுதந்திரம்)- Independence
8. இலக்கியப்பழமை- Literary prowess
9. சிறந்த சிந்தனைகள்/சிறந்த எண்ணங்கள்- Noble ideas
10. தனித்தியங்கும் தன்மை - Acting independently
11. மொழியியல் கொள்கைகள்- lingustics policies

மேற்கூறிய தகமைகளில் ஆகக்குறைந்தது ஏழு/எட்டு தகமைகளைக் கொண்டிருந்தாலே ஒரு மொழி செம்மொழியாகும். நம்ம மொழி மட்டுமே உலகில் இந்தப் பதினொரு தகமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மற்றைய மொழிகளிலுள்ள பழைய இலக்கியங்கள் பெருமளவிற்கு மத சார்பானவை, ஆனால் தமிழ் சங்க இலக்கியங்கள் மட்டுமே மதசார்பற்றவை. இன்று மேலத்தேய நாடுகளில் பேசப்படும் மதசார்பற்ற (secular due to western

political correctness) வாழ்வியல்முறையினை,ஏறக்குறைய இற்றைக்கு 2300 ஆண்டுகளிற்கு முன்னரே (சில தொல்லியல் சான்றுகள் 2800 ஆண்டுகளிற்கு முன்னரே) பேசியவையே சங்க இலக்கியங்கள்.

இத்தகைய பெருமைகளைத் தன்கத்தே கொண்ட தமிழ் தொடர்ந்து சிறப்புடன் வாழவும்,அறிவியல் ரீதியாக இன்னமும் வளர்வதற்கும் நாம் என்ன செய்யப்போகிறோம்? பதிலினை (Harvard tamil chair.org) இல் தேடுங்கள்.

Source : Harvard tamil chair



**வி.இ. குகநாதன்**

தமிழ் மீதான மொழியியல் - பண்பாட்டுப் படையெடுப்பானது ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. மொழியைப் பொறுத்தவரை மற்றைய மொழிக்கலப்புக்களை விட கிரந்தக் கலப்பே கூடிய கேடு விளைவிக்கக்கூடியது. ஏனெனில் அக்கிரந்தச் சொற்களையும் நாம் தமிழ் என்றே எண்ணியிருப்பதாலாகும். கடைச்சங்க காலத்தில் முல்லைப்பாட்டில் ஏறக்குறைய 3 விழுக்காடளவிலிருந்த இக்கலப்பு, ஒன்பதாம் நூற்றாண்டில் (CE 9th century) திருவாசகத்தில் 7 விழுக்காடாக கூடி, இன்று 25-30 விழுக்காடுவரை திட்டமிட்டுத் திணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கலப்பிலிருந்து செம்மொழியான தமிழை மீட்டெடுக்கும் நெடும் பயணத்தில் எடுத்துவைக்கப்படும் ஒரு சிறிய அடியே இக் கையேடு. இதன் மூலம் முடியுமானளவு கிரந்தச் சொற்களிற்குப் பதிலான தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்வதுடன், அவற்றைத் தொடர்ந்தும் பயன்படுத்துவதிலேயே இம்முயற்சியின் வெற்றி தங்கியுள்ளது.

# இது ஒரு அறம்செய் அமைப்பின் விலையில்லா வெளியீடு

ANA Graphics. T.P. : 0777246477